செ.வெ.எண்:02 நாள்:02.05.2017

## பத்திரிக்கைச் செய்தி

## மண்வள அட்டை இயக்கம் 2017-18

கரூர் மாவட்டத்தின் உரத்தின் பயன்பாடு தேவையினை விட அதிகமாக உள்ளது. இதனால் தேவையில்லாத இடத்தில் தேவையில்லாத நேரத்தில் உரமிடுவதால் மண்ணின் வளம் பாதிக்கப்படுவதோடு, விவசாயிகளுக்கு அதிக அளவில் செலவு ஏற்படுகிறது. இதனை தடுக்கும் விதமாக நமது மண்ணில் என்ன வளம் உள்ளது அது எவ்வளவு உள்ளது என்பதைக் கண்டறிந்து தேவைக்கேற்ப உரத்தினை இட வேண்டும். இதற்கு மண் பரிசோதனை மிகவும் அவசியமாகும். மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியோடு **"மண்வள அட்டை இயக்கம்"** நடப்பு ஆண்டில் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் மாவட்டத்தில் 203 வருவாய் கிராமங்களில் உள்ள 146051 பண்ணைக் குடும்பங்களுக்கும் இறவை நிலமெனில் 2.5 எக்டருக்கு ஒரு மண்மாதிரியும், மானாவாரி நிலமெனில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் வலைச் சட்டமுறை அடிப்படையில் மண்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்/வட்டார வேளாண்மை அலுவலர்/துணை வேளாண்மை அலுவலர் மேற்பார்வையில் சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர்களால் எடுக்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் 110 வருவாய் கிராமங்களில் 11900 மண்மாதிரிகள் விவசாய நிலங்களில் உதவி வேளாண்மை அலுவலர்களால் சேகரிக்கப்பட்டு அதனை ஆய்வகங்களில் ஆய்வு செய்து 77812 விவசாய குடும்பங்களுக்கு மண்வள அட்டைகள் வழங்க வேளாண்மைத்துறை மூலம் திட்டமிடப்பட்டுள்ளது.

சேகரிக்கப்பட்ட மண்மாதிரிகள் மாவட்டத்தின் மண்பரிசோதனை நிலையம் மற்றும் நடமாடும் மண்பரிசோதனைகள் நிலையங்களில் ஆய்வு செய்யப்பட்டு, அதன் முடிவுகள் ”மண்வள அட்டை” வடிவில் அனைத்து பண்ணைக் குடும்பங்களுக்கும் வழங்கப்படும். இந்த மண்வள அட்டையில் மண்ணில் அமில, காரத்தன்மை, மண் நயம், சுண்ணாம்பு நிலை, முதன்மை சத்துக்களான தழை, பணி, சாம்பல் சத்துக்கள் மற்றும்

இரண்டாம் நிலை சத்துக்களான கால்சியம், மக்னீசியம், கந்தகம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்களான இரும்பு, துத்தநாகம், மாங்கனிஸ், காப்பர் மற்றும் போரான் ஆகியவற்றின் அளவு, பயிருக்கு தேவையான உரத்தின் அளவு, மற்றும் மண்ணில் உள்ள கல், உவர் தன்மைக்கான தீர்வு முறைகளும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மண்மாதிரிகள் எடுத்தல், ஆய்வு செய்தல், மண்வள சான்று வழங்குதல் குறித்து கரூர் வட்டாரத்திலுள்ள வேட்டமங்கலம் (கிழக்கு) வருவாய் கிராமத்தில் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வுக் கூட்டத்தில் நடப்பாண்டில் வகுக்கப்பட்ட செயல் திட்டத்தின்படி மண் மாதிரிகள் எடுத்து டிசம்பர் இரண்டாம் வாரத்திற்குள் சாதனை அடைய அறிவுறுத்தினார். மண்மாதிரிகளை உரிய காலத்தில் ஆய்வு செய்து. வலைதளத்தில் உரிய பதிவுகளை மேற்கொள்ளவும் அனைத்து விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்கிடவும் அதனை பெற்று அனைத்து விவசாய பெருமக்களும் பயன்அடையமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்த மண்வள அட்டை இயக்கம் தொடர்பாக அனைத்து விபரங்களுக்கும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தையோ மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் உள்ள வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தையோ தொடர்பு கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர்.திரு.கு.கோவிந்தராஜ்.,இ.ஆ.ப கேட்டுக்கொண்டுள்ளார். ஆய்வின் போது வேளாண்மை இணை இயக்குநர் திரு.அ.அல்தாப், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வே) திருமதி.கு.பா.ஜெயந்தி. வருவாய் கோட்டாட்சியர் திரு.பாலசுப்பிரமணி மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் திரு.ப.சிவானந்தம் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**